DIRECTOR OF SOCIAL SECURITY SCHEMES
4 FEB 2020
CHEPAUK, CHENNAI-600 005

PRINCIPAL SECRETARY / COMMISSIONER OF REVENUE ADMINISTRATION
04 FEB 2020
CHEPAUK, CHENNAI-600 005.

ஒட்டெம் டாய், இ.ஆ.ப.,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்
நலத்துறை, தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.
தொலைபேசி : 044–25676303
நிகரி : 044–25672446
மின்னஞ்சல் : adisec@tn.gov.in

நேர்முக கடிதம் எண்.9198/சா.மெ–1/2018–1, நாள் 31.01.2020

Send this to All RDO for necessary

அன்பார்ந்த முனைவர் ராதாகிருஷ்ணன்

பொருள் : ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் சாதிச் சான்று வழங்குதல் – அறிவுரைகள் – சார்பு.

பார்வை :
1. அரசாணை (2ப) எண். 108, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 12.09.2007.
2. அரசாணை (நிலை) எண்.106, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 15.10.2012.
3. அரசாணை (நிலை) எண்.235, வருவாய்த்துறை, நாள் 26.06.2015.
4. அரசாணை (நிலை) எண்.147, வருவாய்த்துறை, நாள் 13.07.2016.

----------------------

Speed Post

பார்வையில் காணும் அரசாணைகளின் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனச் சாதிச்சான்றிதழ் கோரி தாக்கல் செய்யப்படும் விண்ணப்பங்கள் மீது மாவட்ட நிர்வாகம் உடனடியாக விசாரணை செய்து சாதிச்சான்று வழங்கப்படுவதில்லை எனவும், மனுதாரர்கள் அலைக்கழிக்கப்படுகின்றனர் என்றும், கோரிக்கை மனுக்கள் மீது எவ்விதமான பதிலும் வழங்கப்படுவதில்லை எனவும், இதனால், வேலை வாய்ப்பின்மை, குழந்தைகள் கல்வி கற்கவும், மேற்படிப்பு படிக்கவும் இயலவில்லை என பல்வேறு தனிநபர்களிடமிருந்தும், சமுதாய அமைப்புகளிடமிருந்தும், சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்தும் மாண்புமிகு அமைச்சர்களிடமிருந்தும் அரசிற்கு புகார்கள் வந்த வண்ணம் உள்ளன.

3. ஆதிதிராவிடர் / பழங்குடியினர் சாதிச் சான்று கோரும் நேர்வுகளில், தாய், தந்தை அல்லது இருவரும் ஏற்கெனவே பெற்ற ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினர் இனச் சாதிச்சான்றிதழை சம்பந்தப்பட்ட மாவட்ட விழிப்புணர்வுக் குழு ( District Level Vigilance Committee) / மாநில கூர்நோக்கு குழு ( State Level Scrutiny Committee) மெய்த்தன்மைக்கு உட்படுத்தி, அச்சான்று மெய்த்தன்மை வாய்ந்தது என கண்டறியப்பட்டு இறுதி ஆணை வழங்கிய நேர்வுகளில், அப்பெற்றோரின் வாரிசுகளான மகன் மற்றும் மகள் தான் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவர் என சாதிச் சான்றிதழ் கேட்டு விண்ணப்பிக்கும் நிலையில், அக்கோரிக்கை குறித்து விரிவான விசாரணை தேவையெனக் கருதினாலன்றி பெற்றோர் பெற்ற சாதிச் சான்றின் அடிப்படையில் பிள்ளைகளுக்கு விரைவாக சாதிச் சான்றிதழ் வழங்க வேண்டும். மேலும், மனுதாரரது கோரிக்கை உண்மைத்தன்மை வாய்ந்தது என சாதிச்சான்று வழங்கும்

அலுவலரால் சான்று வழங்கும் முன்னரே திருப்தியடைய வேண்டும். அவ்வலுவலரே அவர் வழங்கிய சாதிச்சான்றின் உண்மைத்தன்மைக்கு பொறுப்பாவார் என்பதை வலியுறுத்தி ஆதிதிராவிடர் / பழங்குடியினர் சாதி சான்றிதழ் வழங்கும் அதிகாரம் படைத்த வட்டாட்சியர் / வருவாய் கோட்டாட்சியர் ஆகியோருக்கு உரிய அறிவுரைகள் வழங்குமாறு, தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

வாழ்த்துக்களுடன்

தங்கள் அன்புள்ள,

31/1/2020

பெறுநர்
**முனைவர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப.,**
முதன்மைச் செயலர் /
வருவாய் நிர்வாக ஆணையர்,
எழிலகம், சேப்பாக்கம், சென்னை – 5.